செ.வெ.எண்.590 நாள்.16.11.2017

## காஞ்சிபுரம் மாவட்டம்

## 64–வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவில் 168 பயனாளிகளுக்கு ரூ.3 கோடியே 50 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

****************

காஞ்சிபுரம் அறிஞர் அண்ணா அரங்கில் 64–வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆப., அவர்கள் பேசியதாவது,

இந்தியாவிலேயே தமிழகத்தில் காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள் ஒருங்கிணைந்த செங்கல்பட்டு மாவட்டமாக செயல்பட்டபோது திருவள்ளூருக்கு அருகில் உள்ள ''திரூர் கிராமத்தில்'' 1904–ஆம் ஆண்டு முதல் கூட்டுறவு கடன் சங்கம் துவக்கப்பட்டது. அதே ஆண்டில் இந்தியாவில் முதன்முதலில் துவக்கப்பட்ட நகர கூட்டுறவு வங்கி காஞ்சிபுரத்தில் பெரிய காஞ்சிபுரம் கூட்டுறவு நகர வங்கியாகும். இதன்படி இந்தியாவில் கூட்டுறவு இயக்கத்தின் முன்னோடி நமது மாவட்டமே, என்பது பெருமைக்குரியதாகும். விவசாயிகள், நகர்ப்புற மக்கள் மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய ஏழை எளிய நலிவுற்ற மக்கள் அனைவரும் பயனடையும் வகையில் கூட்டுறவு இயக்கம் சேவை செய்து வருகிறது. காஞ்சிபுரம் மாவட்டத்தில், பல்வேறு வகையான கூட்டுறவு சங்கங்கள் மொத்தம் 827 கூட்டுறவுச் சங்கங்கள் சிறப்பான முறையில் செயல்பட்டு வருகின்றன.

காஞ்சிபுரம் மாவட்டத்தில், காஞ்சிபுரம் மத்திய கூட்டுறவு வங்கி மற்றும் 144 தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்கள் 5 கூட்டுறவு நகர வங்கிகள், 16 நகர கூட்டுறவுக் கடன் சங்கங்கள், 5 தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் மூலமாக பல்வேறு வகையான கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் அறிவிப்பின்படி நடப்பு ஆண்டில் அக்டோபர் முடிய 5784 விவசாயிகளுக்கு ரூ.37.03கோடிக்கு வட்டியில்லாப் பயிர் கடன் வழங்கப்பட்டுள்ளது. இக்கடனை விவசாயிகள் தவணை தேதிக்குள் திருப்பி செலுத்தினால் வட்டி வசூலிக்கப் படுவதில்லை. இக்கடன்களுக்கான 7% வட்டி செலவினத்தை அரசாங்கமே ஏற்றுக் கொள்கிறது.

நடப்பு ஆண்டில் முதலீட்டுக் கடனாக 259 நபர்களுக்கு ரூ.1.70 கோடி வழங்கப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக நகைக்கடனாக 163884 நபர்களுக்கு ரூ.735.16 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் 1279 மகளீர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.20.00கோடியும், 29 ஆடவர் மற்றும் மகளிர் சிறு வணிக கடனாக ரூ.0.23கோடியும், 153 நபர்களுக்கு பணிபுரியும் மகளிர் கடனாக ரூ.1.48 கோடியும், பண்ணை சாராக் கடன்களாக 906 நபர்களுக்கு ரூ.9.54 கோடியும், வழங்கப்பட்டுள்ளது. இது மட்டுமின்றி விவசாயிகள் உற்பத்தி செய்யப்படும் விளைப்பொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்கும்

வகையில் விளைபொருட்களின் ஈட்டின்பேரில் தான்ய ஈட்டுக் கடனாக 359 நபர்களுக்கு ரூ.8.30 கோடியும் வழங்கப்பட்டுள்ளது. 175மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.34.57 இலட்சம் கடன் வழங்கப்பட்டு உள்ளது. மத்திய கூட்டுறவு வங்கி, நகர கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகர கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் வீட்டுவசதி கடனாக 102 நபர்களுக்கு ரூ.4.19 கோடியும், வீடு அடமானக் கடனாக 556 நபர்களுக்கு ரூ.27.64 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. இது தவிர உழைக்கும் மகளிர் கடன், மகப்பேறுக்கடன், டாப்செட்கோ மற்றும் டாம்கோ கடன் ஆகிய பல்வேறு வகையான கடன்கள் கூட்டுறவு சங்கங்கள் மூலம் வழங்கப்பட்டு வருகின்றது. மேலும், விவசாயத்திற்கு தேவையான உரங்களையும், இடு பொருட்களையும் கூட்டுறவு சங்கங்கள் வழங்கி வருகின்றன. நமது மாவட்டத்தில், கூட்டுறவு வங்கி மற்றும் கடன் சங்களின் சார்பில் ரூ.2695.62 கோடி அளவிற்கு வைப்புத் தொகைகள் உள்ளன.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் 1424 கூட்டுறவு நியாயவிலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. இக்கடைகள் மூலம் 6,11,767 குடும்ப அட்டைதாரர்கள் பயன்பெற்று வருகிறார்கள். இக்குடும்ப அட்டைதாரர்களுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்த விலையில்லா அரிசி திட்டத்தின் மூலம் மாதம் ஒன்றுக்கு 10,237 மெட்ரிக் டன் அரிசி வழங்கப்பட்டு வருகிறது.

கூட்டுறவு நியாய விலைக் கடைகளின் மூலம் அயோடின் கலந்த அரசு உப்பு மாதந்தோறும் 180 மெட்ரிக் டன்கள் விற்பனை செய்யப்படுகிறது. இம்மாவட்டத்தில் நடப்பு ஆண்டில் அக்டோபர் திங்கள் வரையில் 32 மெட்ரிக் டன் ஊட்டி தேயிலை விற்பனை செய்யப்பட்டுள்ளது. கூட்டுறவுத்துறை அலுவலர்கள் மற்றும் அனைத்து பணியாளர்களும் அர்ப்பணிப்பு உணர்வுடன் செயல்பட்டு கூட்டுறவு சங்கங்கள் வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு நல்குமாறும் சங்கத்திற்கு வருகை தரும் சங்க உறுப்பினர்கள் மற்றும் வாடிக்கையாளர்களின் நம்பிக்கையினையும், பாராட்டினையும் பெறுகின்ற வகையில் உங்களின் பணிகள் சிறப்புடன் அமைய வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்விழாவில் கூட்டுறவு வார விழாவினையொட்டி நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ/மாணவியர்களுக்கு பரிசுகளையும், சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார். மேலும், சிறப்பாக செயல்பட்ட கூட்டுறவு சங்கங்களுக்கு கேடயங்களையும் மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார். 168 பயனாளிகளுக்கு ரூ.3.5 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார்.

இவ்விழாவில் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி.கே.மரகதம் குமரவேல், காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.சி.வி.எம்.பி.எழிலசரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் வாலாஜாபாத் பா.கணேசன், திருமதி.மைதிலி திருநாவுக்கரசு, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. காஞ்சி பன்னீர்செல்வம், காஞ்சிபுரம் மாவட்ட கூட்டுறவு ஒன்றிய துணைத்தலைவர் திரு.எஸ்.ஆறுமுகம், கூட்டுறவு மண்டல இணைப்பதிவாளர் திரு.ஆர்.கே.சந்திரசேகரன், காஞ்சிபுரம் மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் திரு.இ.கிருஷ்ணமூர்த்தி, மத்திய கூட்டுறவு ஒன்றியத் தலைவர் திரு.மு.காமராஜ், கூட்டுறவு துணை பதிவாளர் திரு.ஆர்.வேணு ஆகியோர் பங்கேற்றனர்.

செய்தி வெளியீடு–செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,காஞ்சிபுரம்.